# குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சீர்காழி, மயிலாடுதுறை மாவட்டம்

**முன்னிலை: திரு.R.கைலாஷ், B.A., B.L.,**

குற்றவியல் நீதித்துறை நடுவர், சீர்காழி.

2026 ஆம் ஆண்டு ஜுலை 13 ஆம் நாள் திங்கள்கிழமை

**CMP.No.756/2026**

**CNR.No.TNMY08-001946-2026**

சந்திரபோஸ்
த/பெ. கோபால்,
பாலுரான்படுகை,
மாதிரவேளுர்,
சீர்காழி தாலுக்கா,
மயிலாடுதுறை மாவட்டம் ......மனுதாரர்/ வழக்கு சொத்தின் உரிமையாளர்

*/எதிராக/*

அரசுக்காக:-
காவல் ஆய்வாளர்,
**ஆனைக்காரன்சத்திரம் காவல் நிலையம்,**
குற்ற எண்.33/2024
U/s. 379 of IPC r/w 21(1) MM Act ...... எதிர்மனுதாரர்/ குற்றமுறையிடுபவர்.

இம்மனு 10.06.2026 தாக்கல் செய்யப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இம்மனுவின் மீதான விசாரணையானது 13.07.2026 ம் தேதியன்று இறுதியாக இந்நீதிமன்றத்தின் முன்பு வந்தபோது மனுதாரர் சார்பில் வழக்கறிஞர் திரு. P. விஜய் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் அரசு உதவி குற்றத்துறை வழக்குரைஞர் நிலை-2 திருமதி K. நிவேதா அவர்கள் எடுத்துரைத்த வாதுரைகளையும் கேட்டு இன்று இந்நீதிமன்றம் இம்மனுவில் வழங்கிடும்...

## *உத்தரவு*

இம்மனு மனுதாரரால் பிரிவு 497 & 503 BNSS ன் கீழ் வழக்கு சொத்தை திரும்பப்பெறுவதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுவின் சுருக்கம்:-**

இந்த மனுதாரர் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட வழக்கு சொத்தின் உடைமையாளர் ஆவார். மேற்படி வாகனம் அவரது மகன் பெயரில் இருந்து வருவதாகவும், தற்போது அவர் வெளிநாட்டில் வேலைபார்த்து வருவதால் அவருக்கு பதிலாக மனுவினை தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். மனுதாரர் மகனுக்கு சொந்தமான TN 82 X 7024 என்கிற பதிவெண் கொண்ட MAHINDRA டிராக்டர் மற்றும் அதனுடன் இணைந்த TN 25 AK 9615 என்னும் பதிவெண் கொண்ட டிப்பர் வாகனமானது ஆனைக்காரன்சத்திரம் காவல்

KAILAASH R Digitally signed by KAILAASH R Date: 2026.07.13 16:57:27 +0530

ஆய்வாளரால் குற்ற எண்.33/2024, சட்டப்பிரிவு 379 IPC R/w 21(1) MM Act என்ற வழக்கில் கைப்பற்றப்பட்டு காவல் நிலையத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்கும், வாகனத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. மேற்படி வாகனம் தொடர்ந்து காவல் நிலையத்தில் மழையிலும், வெயிலிலும் நின்றுகொண்டிருப்பதால் சேதமடையவும், பழுதடையவும் வாய்ப்புள்ளதாகவும், மேற்படி வழக்குச்சொத்தான டிராக்டர் மற்றும் அதனோடு இணைந்த டிப்பர் வாகனத்தை மனுதாரர்/வாகனத்தின் உரிமையாளருக்கு தேவைப்படுவதால் இடைக்காலமாக தனது வசம் ஒப்படைக்கக்கோரி மனுதாக்கல் செய்துள்ளார்.

2. அரசு தரப்பிலும், சம்மந்தப்பட்ட காவல் துறை தரப்பிலும் அறிவிப்பு கொடுக்கப்பட்டு பதில் பெறப்பட்டதில், ஆணைக்காரன்சத்திரம் காவல் நிலைய குற்ற எண்.33/2024, சட்டப்பிரிவு 379 IPC R/w 21(1) MM Act என்ற வழக்கின் வழக்கு சொத்தை மனுதாரர் வசம் ஒப்படைத்தால் மீண்டும் குற்ற சம்பவத்தில் ஈடுபட வாய்ப்புள்ளதாலும், தடயப்பொருளை உருமாற்றம் செய்யவோ, விற்கவோ வாய்ப்புள்ளது என்பதாலும் வாகனத்தை உரிமையாளரிடம் ஒப்படைக்க கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. இந்த வழக்கானது சட்டத்திற்கு புறம்பாக எந்தவொரு நடத்து சீட்டும் இல்லாமல் அரசு அனுமதியின்றி டிராக்டர் மற்றும் டிப்பர் மூலமாக விற்பதற்காக 1/2 யூனிட் ஆற்று மணலை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள டிராக்டர் மற்றும் டிப்பரில் எதிரி ராஜேஷ் திருடி ஏற்றிச்சென்றது சம்பந்தப்பட்ட வழக்காகும். மேற்படி வழக்குச் சொத்தான TN 82 X 7024 மற்றும் TN 25 AK 9615 என்கிற பதிவெண் கொண்ட டிராக்டர் மற்றும் டிப்பர் வாகனம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து **CP.No.65/2026** ஆக பதிவு செய்யப்பட்டு ஆணைக்காரன்சத்திரம் காவல் நிலையம் வசம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

4. மனுதாரர் சமர்பித்த ஆவணங்களை பரிசீலனை செய்யும்போதும், அரசு தரப்பில் கொடுக்கப்பட்ட பதிலுரையை பார்க்கும்போதும், இந்த வழக்கு சொத்தான டிராக்டர் மற்றும் டிப்பர் வாகனம் மனுதாரரின் மகனுக்கு சொந்தமானது என்பதும், மனுதாரரும் அதற்கு உடைமையாளர் என்பதும் தெரியவருகிறது. மேற்படி வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டு வழக்கு சொத்து எண் பெறப்பட்டு ஆணைக்காரன்சத்திரம் காவல் நிலையம் வசம் உள்ள நிலையில், மனுதாரர் தொழில் செய்து வருமானம் ஈட்டுவதையும், நீண்ட நாட்கள் பயன்படுத்தாமல் இருந்தால் வாகனம் சேதமடைந்து பழுதடையக்கூடுடம் என்பதையும் கருத்தில் கொண்டும், மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் 'Sunderbhal Ambalal Desai vs State Of Gujarat' ( SLP Cr.l 2745 of 2022 dated 01.10.2002) என்னும் வழக்கின் முன் தீர்ப்பின் அடிப்படையிலும், மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் B. Loganathan Vs Inspector of Police, Lalapettai Police Station (Crl.RC(MD) No.212/2016) என்னும் வழக்கின் முன் தீர்ப்பின்

KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.07.13 16:57:35 +0530

அடிப்படையிலும், மேற்படி வழக்கு சொத்தான டிராக்டர் வாகனத்தை மனுதாரர் வசம் இடைக்கால பொறுப்பில் பின்வரும் நிபந்தனைகள் அடிப்படையில் ஒப்படைக்க இந்நீதிமன்றம் உத்திரவிடப்படுகிறது.

**நிபந்தனைகள்:**

1. மனுதாரர் மற்றும் 2 நபர்கள் பிணையதாரர்களுடன் தலா ரூ.3,00,000/-ற்கான சொந்த பிணைபத்திரம் எழுதித்தர வேண்டும் என உத்திரவிடப்படுகிறது. மேற்படி நபர்களின் செல்வ நிலையை காண்பிக்க உரிய வரி ரசீது/ சான்றிதழ் தாக்கல் செய்ய வேண்டும்.

2. மனுதாரர் மயிலாடுதுறை மாவட்டத்தைச் சார்ந்த மாவட்ட சமரச மையத்திற்கு (District Mediation Centre) ரூ.10,000/- தொகையை Non-Refundable Deposit ஆக செலுத்த வேண்டும்.

3. மேற்படி இரு வாகனங்களின் அசல் பதிவு சான்றிதழை இந்நீதிமன்ற தலைமை எழுத்தரிடம் காண்பித்து, மேற்படி ஆவண நகலில் 'Compared with original ' என சான்றொப்பம் பெற்று தாக்கல் செய்ய வேண்டும்.

4. இந்த உத்தரவினை காண்பித்து, மனுதாரர் காவல் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வழக்கு சொத்தை நான்கு கோணங்களிலும் புகைப்படம் எடுத்து அதனை புகைப்படம் மற்றும் Pendrive ல் பதிவு செய்து, அவற்றை U/s. 63 BNSS ன் கீழான சான்றிதலோடு ஒப்படைக்க வேண்டும்.

5. வழக்கு சொத்தை வழக்கு முடியும் வரை விற்கவோ, அடகு வைக்கவோ, உருமாற்றம் செய்யவோ மற்றும் சட்டத்திற்கு புறம்பான எவ்வித செயல்களுக்குமோ ஈடுபடுத்தக்கூடாது.

6. மனுதாரர் வழக்கு விசாரணையின்போது வழக்கு சொத்தை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டும்.

7. மனுதாரர் ரூ.3,00,000-க்கு பஞ்சனாமா எழுதிக்கொடுக்க வேண்டும்.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் வருடம் ஜுலை மாதம் 13ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இந்த உத்தரவு என்னால் பகரப்பட்டது.

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.07.13 16:57:44 +0530

**குற்றவியல் நீதித்துறை நடுவர்**
**சீர்காழி.**